**தலைப்பு 322 – தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 322 - தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தித்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட கருத்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### கணக்கீட்டு குறைபாடுகள்

### (அ) அரச உத்தியோகத்தர்களிள் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி பிரமாணம் 506 (ஈ) இன் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இணக்க கூற்றுக்களின் பிரகாரம் ஆக குறைந்த பெறுவனவு எல்லை ரூபா 22,000,000 எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் வருடாந்த ஒதுக்கீட்டு சட்டத்தின் பிரகாரம் அந்த எல்லை 22,200,000 ஆகும் அதன் பிரகாரம் இணக்க கூற்றின் குறைந்த பெறுவனவு எல்லை மற்றும் வருடாந்த ஒதுக்கீட்டு சட்டத்தின் ஆக குறைந்த பெறுவனவு எல்லைக்கு இடையே 200,000 ஆன வேறுபாடு காணப்பட்டது | சீராக்கப்பட்ட நி.பி 506(உ) பிரகாரம் அரச உத்தியோகத்தர்களிள் முற்பண பி கணக்கு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிப்பதாக. | இணைக்க கூற்று எல்லைகள் சரியாக காண்பிக்கப்பட வேண்டும் |

### (ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 7,727,804,451 ஆன நிதியல்லா சொத்துக்களின் இறுதி மீதி மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுகளில் ஆரம்ப மீதியாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆண்டின் கணக்குகளில் ஆரம்ப மீதிக்கு சேர்த்தல்களாக பதிவு செய்யப்பட்டதாக | கணக்கு மீதிகள் சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டின் நிதி அல்லாத சொத்துக்களுக்குரிய நடைமுறை வேலைகளின் பெறுமதி மற்றும் கைதவிர்ப்பு தொடர்பான எந்த ஒரு சீராக்கமும் நிதி அல்லாத சொத்துகளுக்குரிய திறைசேரி அச்சீட்டு SA 82 இல் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | சொத்து கணக்கு சரியாக கணக்கீடு செய்யப்பட்டதன் பின்னர் 2023 ஆம் ஆண்டு முதல் குறித்த சீராக்கங்களை சரியாக மேற்கொள்வதற்கு குறித்துக் கொண்டுள்ளதாக | கணக்கு மீதிகள் சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும் |
| (iii) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளின் நிகழ்ச்சி திட்டங்களின் பிரகாரம் செலவின கூற்று ஏசிஏ 2(i) இன் பிரகாரம் மூலதனச் சொத்துக்கள் கையேற்றல் ரூபா 21,525,173 எனக் காணப்பட்ட போதும் சிகாஸ் நிகழ்ச்சிதிட்டத்தின் கீழ் SA 82 படிவத்தில் ஆண்டில் கொள்வனவு காண்பிக்கப்பட்டிருக்க வில்லை | 2023 ஆண்டில் சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்வதற்கு குறித்துக் கொண்டதாக | ஆண்டில் கையேற்கப்பட்ட சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பொறுப்புக்கள் கடப்பாடுகளுக்கு உட்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு செலவின தலைப்பு விடயங்களுக்காக மேற்கொள்ளப் பட்டிருந்த நிதி ஏற்பாடுகளை மிகைத்து பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்பட முடியாத போதும் 03 செலவினை விடயங்களில் நிதிஏற்பாடுகளை மிகைத்து மொத்தம் ரூபா 1,968,451 ஆன பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளை மிகைத்து நடவடிக்கை எடுக்க கூடாது |

### 2.2 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் தாவரவியல் பூங்காக்கள் தணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை யொன்று தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த | எதிர்காலத்தில் குறித்த தகவல்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| வேண்டியதுடன் இம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப் பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக பேணிச் செல்வதற்கு வேண்டிய மாற்றங்களை செய்ய வேண்டிய போதிலும் அம்மீளாய்வுகள் எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப் பட்டதாக கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன்முன்னேற்றம் கண்டிராத செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தெதுரு ஓயா முதல் கனேவத்த மருந்துகள் பூங்கா வரை நீர் வழங்கலொன்றை வழங்குவதற்காக புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று இல்லாமல் நீர்ப்பாசன திணைக்களத்திற்கு 2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 03 சந்தர்ப்பங்களில் ரூபா 18,581,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் குறித்த செயற்பாடுகளுக்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 1,323,623 தொகை 2021 திசெம்பர் 16 ஆந் திகதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது எவ்வாறாயினும் இச்செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மீளாய்வாண்டு திசெம்பர் வரையில் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. | தற்போது அச்செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தில் காணப்படுவதாகவும் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட கொரோனா தொற்று நிலைமை மற்றும் பொருளாதார சிக்கல் காரணமாக நாடு மூடப்பட்டு இருந்தமை இறக்குமதி பொருட்கள் மட்டுப்படுத்தப்பட்டமை போன்ற விடயங்களால் தாமதமொன்று இடம்பெற்றதாக | செயற்திட்டங்கள் உரிய காலத்தினுள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் |

### 3.2 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கனேவத்த வன மருந்துகள் பூங்காவின் மலசல கூட முறைமையின் நிர்மாணிப்பு ஒப்பந்தத்தினுள் கிரயத்தை மதிப்பீடு செய்யக்கூடிய கூரையைப் பொருத்துதல் இரும்பு நுழைவாயில் மற்றும் நிலக்கல் பிடித்தல் தொடர்பான 06 ரூபா 970,000 ஆன Provisional sum பெறுமதி உள்ளடக்கப்பட்டு அதில் 04 Provisional sum களுக்காக உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமானத்தை மிகைத்து ரூபா 776,357 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது | அளவீட்டு பத்திரத்தில் திட்டவட்டமாக இனங் காணக்கூடிய உருப்படி களுக்காக திட்டவட்டமான விலைகள் குறிப்பிடப்பட்டுள்ளன ஏனைய உருப்படிகளைப் பொருத்தகைக்கான விலை விபரங்கள் மதிப்பீட்டில் வேறாக உள்ளடக்கப்பட்டுள்ளது | திட்டவட்டமாக இனங்காணக் கூடிய வேலைகளுக்காக கிரய மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட வேண்டும் |

எனினும் தற்போது பூர்த்தி செய்யப்பட அனைத்து வேலை பகுதிகளுக்குமாக 10% பெறுமதி உள்ளடக்கப்பட்டு கொடுப்பனவு பரிந்துரைத்த அளவிற்கு குறைவாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாக

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கனேவத்த வன மருந்துகள் பூங்காவில் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 1,936,769 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு இருந்த சிற்றுண்டிச்சாலை 2020 பெப்ரவரி மாதம் வரை பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் காணப்பட்டது. | சிற்றுண்டிசாலையில் இருந்து கிடைக்கும் வருமானம் போதுமானதாக இல்லாததால் வாடகைக்கு பெற்றவர் சிற்றுண்டிசாலையை நடாத்திச் செல்வதை நிறுத்தி உள்ளதாகவும் எதிர்வரும் ஆண்டுகளில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் | கட்டிடங்களை செயற்திறனாகப் பயன்படுத்தப்பட வேண்டும் |
| (ஆ) | 2015 திசெம்பர் 29 ஆந் திகதி ரூபா 593,340 தொகை செலவிடப்பட்ட ரோயல் தாவரவியல் பூங்காவில் சேதன பசளை உற்பத்திக்காக தூளாக்கும் (Multi chopper) இயந்திரமொன்று கொள்வனவு செய்யப் பட்டிருந்த போதும் உரிய இயந்திரத்தை பொருத்து வதற்கு நிலையமொன்று நிர்மாணிக்காமை காரணமாக 07 ஆண்டு காலப்பகுதியில் விளைவற்று காணப்பட்டது | 2024 ஆண்டில் சேதனப் பசளை பிரிவின் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டதன் பின்னர் இந்த உபகரணங்களை பயன்படுத்துவதற்கு உள்ளதாக | குறித்த இயந்திரங்களை நோக்கத்துக்குட்பட்ட செயற்பாட்டுக்கு பயன்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | 2019 ஆம் ஆண்டில் ரோயல் தாவரவியல் பூங்காவில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த சிற்றுண்டிச்சாலைக்காக ரூபா 547,432 ஆன 130 கதிரைகள் மற்றும் ரூபா 237,000 ஆன 30 மேசைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரை சிற்றுண்டிச்சாலை நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமை காரணமாக பழைய சிற்றுண்டிசாலைகளுக்கு 28 கதிரைகள் வழங்கப்பட்டு எஞ்சிய பொருட்கள் அனைத்தும் 03 ஆண்டுகளாக விளைவற்று காணப்பட்டன. | இந்த உபகரணங்கள் பூங்காவின் வெவ்வேறு தேவைகளுக்காக பயன்படுத்தப்படுவதாகவும் எதிர்காலத்தில் இக்கதிரைகளை தேவைகள் காணப்படுகின்ற வேறு ஒரு பிரிவுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பதாக | தேவைப்பாடு தொடர்பாக சரியாக மதிப்பீடு செய்த பின்னர் கொள்வனவு செய்ய வேண்டியதுடன் தளபாட உபகரணங்களைப் பயன்படுத்தப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வெளிமட பிரதேச செயலக அதிகாரத்திற்குட்பட்ட ஹக்கல தாவரவியல் பூங்காவின் காணியை அளந்து கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இப்போது அளந்து எல்லைகள் குறிப்பதற்காக நில அளவை திணைக்களத்திற்கு ரூபா 448,500 ரூபாய் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுவிரைவில் இந்த எல்லை குறியீடுகளை இட்டு தருமாறு வேண்டுகோள் விடப்பட்டுள்ளதாக | காணி அளவீடு செய்யப்பட்டு கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.4 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கனேவத்த வன மருந்துகள் பூங்காவில் விரிவுரைகள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் என்பவற்றை நடத்தும் நோக்கில் 2017 ஆம் ஆண்டில் 23,392,342 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த இரண்டு மாடி விரிவுரை கட்டிடத்தில் 6 ஆண்டு காலப்பகுதியில் 64 விரிவுரைகள் மாத்திரம் நடத்தப்பட்டிருந்ததுடன் வெளி தரப்பினருக்கு வாடகைக்கு வழங்குவதன் மூலம் ரூபா 40,500 ஆன வருமானம் ஒன்று உழைக்கப்பட்டு இருந்தது அதன் பிரகாரம் பாரியளவு கிரயமொன்று செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ருந்த கட்டிடம் குறை பயன்பாட்டில் காணப்பட்டது. | கொவிட் தொற்று நிலைமை மற்றும் பொருளாதார நெருக்கடி கால எல்லைக்குள் காணப்பட்ட வரையறைகள் காரணமாகவும் ஒழுங்கு செய்யப்பட்ட செயலமர்வுகளைக் கூட தொடர்ச்சியாக நடாத்த முடியாமல் போனதாக . | குறித்த கட்டிடங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும |
| (ஆ) | நாரஹேன்பிட்ட உதவி பணிப்பாளர் அலுவலகம் அமைந்துள்ள காணி முறையாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்ததுடன் 2022 ஆகஸ்ட் வரையிலும் அவ்வளவில் அத்துமீறிய நிர்மாணமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | காணப்படும் நிலைமையின் கீழ் அத்துமீறிய நிர்மாணத்தை அகற்றுவதற்காக சட்ட நடவடிக்கைகளை எடுப்பது சிக்கலாக உள்ளதாக | காணியின் உரித்தை கையேற்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அத்துமீறிய நிர்மாணங்கள் அகற்றப்பட வேண்டும் |
| (இ) | 1989 பெப்ரவரி 27 ஆம் திகதிய கமா/4/பூ/04/88 ஆம் இலக்க கண்டி மாவட்ட செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் பேராதனை தாவரவியல் பூங்காவிற்கு வரும் வாகனங்களை நிறுத்துவதற்காக இடம் ஒன்றாக ரோயல் தாவரவியல் பூங்காவின் முன்னால் அமைந்துள்ள பிரதான வீதியில் நடுப்பகுதி முதல் 50 அடி வீதி ஒதுக்கமாக எடுக்கப்பட்டு எஞ்சிய பகுதி பூங்காவிற்கு கையளிக்கப்பட்டிருந்தது | புலனாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு இந்த காணிப் பகுதியிலிருந்து அத்துமீறிய குடியிருப்பாளரை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | காணின் உரித்தை கையேற்க வேண்டியதுடன் அத்துமீறிய நிர்மாணம் அகற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அந்த வளவிற்குரிய இடத்தில் வெளிதரப்பினர் ஒருவரால் 250 சதுர அடி அளவிலான கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டு வியாபாரமென்றை நடத்திச் செல்லப்பட்டு வந்த போதும் அதனை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | | |
| (ஈ) | சீதாவக்க ஈரவலய தாவரவியல் பூங்காவிற்குரிய 08 ஏக்கர் அளவிலான தேயிலைத் தோட்டம் முன்னைய ஆண்டின ஜனவரி 29 ஆந் திகதி 5 ஆண்டு கால பகுதிக்காக அரசின் மதிப்பீடு ஒன்று இல்லாமல் வெளிநபர் ஒருவருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. 2022 ஜனவரி 28 ஆந் திகதி குத்தகையாளரால் உடன்படிக்கை மீறியதன் பேரில் உடன்படிக்கை இரத்து செய்யப்பட்டிருந்த போதும் நிலுவையாக காணப்பட்ட ரூபா 477,002 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் குறித்த நிலுவைத் தொகையை அறுபடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை பணம் அறவிடப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிறுவனத்திற்குரிய நிதி அல்லாத சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | நிதி அல்லாத சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

**4. மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சமூர்த்தி அதிகார சபைக்கு இணைக்கப்பட்டிருந்த 06 பதவிகளுக்குரிய 12 உத்தியோகத்தர்களுடன் கூடிய பதவியணியினர் ஒன்று தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டிருந்தனர். அதில் 02 பதவிகளுக்குரிய 06 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டி இருந்த போதும் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியிணிக்கு உள்ளீர்க்கப்படாமல் அந்த உத்தியோகத்தர்களுக்காக மாதாந்தம் ரூபா 335,596 ஆன சம்பளமாக கொடுப்பனவு செய்யப்பட்டு வந்தது | திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் மேற்படி ஊழியர்கள் காண்பிக்கப்பட்டுள்ளதாகவும் 322-02-1-1001 ஆம் இலக்க சம்பளம் மற்றும் வேதன செலவின விடயத்தில் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டின் கீழ் சம்பளம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக. | திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உள்ளீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும |